செ.வெ.எண்: 67 நாள்: 25.10.2019

# செய்திக்குறிப்பு

## தொகுதி II-க்கான இலவச பயிற்சி வகுப்பு

கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் இயங்கி வரும் தன்னார்வ பயிலும் வட்டம் சார்பாக பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. விரைவில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் அறிவிக்கப்பட உள்ள தொகுதிII-க்கான பணியிடத்திற்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் அறிவிக்க உள்ள தொகுதி II-க்கான நகராட்சி ஆணையர், சார்பதிவாளர், துணை வணிகவரி அலுவலர், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் மற்றும் உதவியாளர் ஆகிய பணியிடத்திற்கு இலவச பயிற்சி வகுப்புகள் வருகின்ற 06.11.2019 அன்று காலை 10.00 மணி அளவில் கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், வெண்ணைமலை வளாகத்தில் துவங்கப்படவுள்ளது. இப்பயிற்சியின் போது இலவசமாக பாடக்குறிப்புகளும், முந்தைய ஆண்டு மாதிரி வினாத்தாள்களும் வழங்கப்படும்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்துக் கொள்ள விருப்பமுள்ள தகுதியுடைய மனுதாரர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தினை, நேரில் தொடர்பு கொண்டு முன் பதிவு செய்தும், இலவச பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டும் பயன்பெறுமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**